32—

சட்டக் கல்லூரி

***282—திரு. சு. ரவி:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதியில் சட்டக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி, சட்டத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) அரக்கோணம் தொகுதியில் அரசு சட்டக் கல்லூரி அமைக்க அரசு முன் வருமா என்கின்ற இந்த வினாவிற்கு பதில், 'இல்லை'.

(ஆ) எனவே, வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், அண்ணன், திரு. ஓ.பி.எஸ். அவர்களை வணங்குகிறேன். எங்களுடைய கொறடா அண்ணன் திரு. வேலுமணி அவர்களையும் வணங்குகிறேன்.*

இராணிப்பேட்டை மாவட்டத்திலுள்ள அரக்கோணம் சட்டமன்றத் தொகுதி, தனித் தொகுதியாகும். அந்தத் தொகுதியில், தாழ்த்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், தொழிலாளர்கள், பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய மக்கள் அதிகமாக வாழ்ந்து வருகிறார்கள். அங்கே வசிக்கின்ற மாணவர்கள் சட்டம் பயில்வதற்கு மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறார்கள். சட்டம் படிப்பதற்கு, நூற்றுக்கணக்கான மாணவர்கள், பக்கத்தில் உள்ள ஆந்திர மாநிலம், திருப்பதியில் உள்ள சட்டக் கல்லூரிகளுக்குச்

2022 மார்ச் 22]

சென்று படித்து வருகிறார்கள். அரக்கோணம் தொகுதியில், சட்டக் கல்லூரி அமைத்தால் பின்தங்கிய மக்களிடையே சட்ட அறிவைக் கொண்டு சேர்த்து, சட்ட விழிப்புணர்வை ஏற்படுத்த நல்ல ஒரு வாய்ப்பாக அமையும். எனவே, பின்தங்கிய மக்கள் அதிகமாக வசிக்கக்கூடிய எனது அரக்கோணம் தொகுதியில், ஒரு சட்டக் கல்லூரியை அமைத்துத் தர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக ஓர் அரசு சட்டக் கல்லூரியை தற்காலிக வாடகைக் கட்டடத்தில் தொடங்க வேண்டுமென்றால் சுமார் 2 கோடியே 75 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. நிரந்தரக் கட்டடத்தில் சட்டக் கல்லூரியைத் தொடங்க வேண்டுமென்றால் சுமார் 102 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. மாவட்டங்களில் எங்கெல்லாம் அரசு சட்டக் கல்லூரி மற்றும் தனியார் சட்டக் கல்லூரி இல்லையோ, அங்கெல்லாம் சட்டக் கல்லூரியைக் கொண்டு வர வேண்டும் என்பது கொள்கை முடிவாக இருந்தாலும்கூட, அரசின் நிதிநிலையைக் கருத்திற்கொண்டு, அது தற்போது ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாணவர்கள் தங்கள் தொகுதியிலிருந்து பக்கத்து மாநிலமான ஆந்திராவிற்குச் செல்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால், பக்கத்திலேயே இருக்கின்ற வேலூர் சட்டக் கல்லூரியில் உள்ள மொத்த இடங்களில் கடந்த ஆண்டு 5 காலி இடங்கள் இருந்தன. பக்கத்தில் இருக்கிற பட்டரைப்பெரும்புதூரில் 28 காலி இடங்கள் இருந்தன. அந்த சட்டக் கல்லூரிகளிலெல்லாம் இன்னும் இடங்கள் முழுமையாக நிரப்பப்படவில்லை. எனவே, பக்கத்தில் இருக்கும் ஆந்திர மாநிலத்திற்குப் போவதைவிட மிக அருகில் உள்ள மேற்குறிப்பிட்ட இந்த இரண்டு சட்டக் கல்லூரிகளில் சேர்ந்து சட்டம் பயிலலாம். அந்த இரு சட்டக் கல்லூரிகளிலும் கடந்த 2020–2021 ஆம் ஆண்டில் காலி இடங்கள் இருந்தன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, அரக்கோணம் தொகுதியில் சட்டக் கல்லூரி துவக்குவதற்கான முகாந்திரம் எதுவும் எழவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

[2022 மார்ச் 22

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 6 அரசு சட்டக் கல்லூரிகள் இருந்த நிலையில், கடந்த அ.தி.மு.க. ஆட்சியில், பின்தங்கிய மக்களிடையே சட்ட அறிவைக் கொண்டு சென்று, சட்ட விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில், அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள், எந்தெந்த மாவட்டங்களில் சட்டக் கல்லூரி இல்லையோ, எந்தெந்த மாவட்டங்கள் பின் தங்கிய மாவட்டங்களாக இருக்கின்றனவோ அவற்றைக் கண்டறிந்து, ஒரே வருடத்தில் 6 சட்டக் கல்லூரிகளைத் திறந்து வைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கேள்விக்கு வாருங்கள்.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராணிப்பேட்டை மாவட்டம் புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டம். இராணிப்பேட்டை மாவட்டத்தில் சட்டக் கல்லூரி இல்லை. ஆகவே, தனித் தொகுதியான அரக்கோணம் தொகுதியில் ஒரு சட்டக் கல்லூரி அமைத்துத் தந்தால் அங்கு அதிகமாக வாழக்கூடிய ஏழை எளிய மாணவர்கள் பயன்பெறுவார்கள். இதே கேள்வியைக் கடந்த அ.தி.மு.க ஆட்சியில்கூட எழுப்பியபோது, அப்போதைய சட்டத் துறை அமைச்சர் திரு. சி.வி. சண்முகம் அவர்கள், பரிசீலனை செய்யப்படும் என்ற உறுதியை இந்த அவையில் தந்திருக்கிறார். ஆகவே, தற்போதைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சராக இருக்கின்ற நீங்களும் அந்த உறுதியைத் தந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கனிவான கவனத்திற்கு எடுத்துச் சென்று, தனித் தொகுதியான அரக்கோணம் தொகுதியில் ஒரு சட்டக் கல்லூரியை அமைத்துத் தர வேண்டும் என்று உங்களைக் கேட்டு அமர்கின்றேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்களும் அதை மறுக்கவில்லை; எங்களுடைய தேர்தல் அறிக்கையிலும் சொல்லியிருக்கிறோம். ஆனால், அரசினுடைய நிதிநிலையைக் கருத்தில்கொள்ள வேண்டியிருக்கிறது. ஒரு நிரந்தரமான கட்டடத்தில் சட்டக்

2022 மார்ச் 22]

கல்லூரி தொடங்க வேண்டுமென்றால், இன்றைய சூழ்நிலையில் 102 கோடி ரூபாய்க்குமேல் நாம் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. ஏனென்றால், தமிழகத்திலுள்ள சட்டக் கல்லூரிகளிலே மொத்தமாக 16,094 இடங்கள் ஒப்பளிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில், 15,018 மாணவர்கள்தான் படித்து வருகிறார்கள். 1,076 இடங்கள் காலியாக இருக்கின்றன. இடப்பற்றாக்குறை என்கின்ற பேச்சே இங்கு எழவில்லை. தற்போதைக்கு அது ஒத்திவைக்கப்பட்டிருக்கிறதே தவிர, 'மாவட்டத்திற்கு ஒரு சட்டக் கல்லூரி' என்பதை நாங்கள் எந்தக் காலத்திலும் மறுக்கவில்லை; எங்களுடைய கொள்கை முடிவும் அதுதான். நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தங்களுடைய தேர்தல் அறிக்கையிலேயே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இருந்தாலும், இன்றைய நிதிநிலைமையைக் கருத்தில்கொண்டு தற்போது இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. தளவாய் சுந்தரம் அவர்கள்.*

திரு. ந. தளவாய் சுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மீண்டும் இதே கருத்தை நான் வலியுறுத்துகிறேன். கன்னியாகுமரி மாவட்டம் என்பது தமிழ்நாட்டில் கடைக்கோடியில் இருக்கிற மாவட்டம். மாண்புமிகு அம்மா அவர்கள் இருந்தபோது, ஏற்கெனவே அங்கு ஒரு அரசு கலைக் கல்லூரியைக் கொடுத்தார்கள். அதற்கான புதிய கட்டடமும் கட்டப்பட்டிருக்கின்றது. அரசுக் கல்லூரி இடம் காலியாக இருக்கின்றது. அந்த பழைய கட்டடத்திலே சட்டக் கல்லூரியைத் தொடங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாண்புமிகு அமைச்சர் திரு. த. மனோ தங்கராஜ் அவர்களும், மற்றவர்களும் இதே*

கோரிக்கையை எங்களிடம் தந்திருக்கிறார்கள். அது மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன் அவர்கள்.*

திரு. தா. உதயசூரியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு மூன்று ஆண்டுகள் ஆகின்றன. நான், 2019 ஆம் ஆண்டிலேயே கோரிக்கை வைத்தேன். கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, போக்குவரத்திற்கு வழி இல்லாத காரணத்தினால், அந்தக் கட்டடம் திறக்கப்படாமல் இருந்தது. ஒருங்கிணைந்த வேளாண்மை விற்பனைக்கூடத்திற்குச் சொந்தமான இடத்தின் வழியாகத்தான் நடைபாதை செல்ல வேண்டும். ஆகவே, மிக அருகில் இருக்கின்ற அந்த இடத்தை ஒதுக்கித் தருவதற்கு மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களிடம் எடுத்துச் சொல்லி, இந்த நிதியாண்டில் வழியை ஏற்படுத்தி, ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்களைத் திறப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று சென்ற கூட்டத்தொடரில் கேட்டுக்கொண்டேன். அதனடிப்படையில் கள்ளக்குறிச்சி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் 5,19,350 ரூபாய் செலுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்த நிதியாண்டில் அந்தத் தொகையை செலுத்தி, இந்தக் கூட்டத்தொடர் முடிந்த பிறகு, அந்த ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தைத் திறந்து வைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான மதிப்பீடு வேளாண்மைத் துறையிலிருந்து பெறப்பட்டிருக்கிறது; நிதித் துறையினுடைய ஒப்புதல் பெறப்பட்டிருக்கிறது. நிச்சயமாக செலுத்த வேண்டிய தொகை செலுத்தப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளின்படி, சங்கராபுரத்தில் இந்த ஆண்டிலேயே அந்த நீதிமன்றங்கள் திறந்து வைக்கப்படும் என்பதை மாண்புமிகு*

2022 மார்ச் 22]

பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 33, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

33—

அடுக்குமாடிக் குடியிருப்பு

***1914—திரு. கே. பொன்னுசாமி:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மூலமாக அடுக்குமாடிக் குடியிருப்பு கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சேந்தமங்கலம் தொகுதியில் தற்போது அடுக்குமாடிக் குடியிருப்பு கட்டும் திட்டம் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள்.*

திரு. கே. பொன்னுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதியில் ஐந்து பேரூராட்சிகள் உள்ளன. அந்தப் பேரூராட்சிப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்குச் சொந்தமான நிலமோ, வீடோ இல்லாமல் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, வாடகை வீட்டில் வசித்து வருகிறார்கள். கொரோனா பெருந்தொற்று காலங்களில் அந்தக் கட்டடத்திற்கு வாடகைகூட கட்ட முடியாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, அந்தப் பகுதி மக்கள் பயன்பெறும்வகையில், நகர்ப்புர வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக அடுக்குமாடிக் குடியிருப்பு கட்டும் திட்டத்தின்மூலம் வீடுகள் கட்டித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.*